

# VG BUSINESS MAGAZINE

**SEPTEMBER 2021**

FOR INTERNAL CIRCULATION ONLY

**வேட்டுவக்கவுண்டர் என்பது நமது பெருமை**

மாதம்
September – 2021

இதழ்
3

ஆசிரியர்
கவிதா வாழைபரமேஸ்வரன்

இணை ஆசிரியர்
Dr.வாழைபரமேஸ்வரன்

வடிவமைப்பு
கவிதா வாழைபரமேஸ்வரன்

MOBILE
90037 95243

EMAIL
vgbusinesstycoons@gmail.com

WEBSITE
vgtycoons.com

For Internal Circulation Only

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே...


# முகப்புரை

நாம் சுதந்திரமடைந்து 74 ஆண்டுகளைக் கடந்து 75 வது ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளோம். இந்த மகிழ்ச்சியான தருணத்தில் சுதந்திரத்திற்காக போராடிய நமது வேட்டுவ கவுண்டர் சமுதாய முன்னோர்களை நினைவு கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நாம் அந்நியர்களிடமிருந்து சுதந்திரம் பெற்று விட்டாலும் பொருளாதாரத்தில் சுதந்திரம் அடையவில்லை. பொருளாதார கல்வியை அடுத்த தலைமுறைக்கு கற்றுக் கொடுப்பதன் மூலம் நமது சமுதாயம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையும். வேட்டுவக்கவுண்டர்களின் வணிகத்தை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தி நமது சமுதாய மக்களை நல்ல நிலையை அடையச் செய்வதே வேட்டுவக்கவுண்டர் வணிக மேம்பாட்டு அமைப்பின் (VG BUSINESS TYCOONS) நோக்கம்.

நாம் ஒவ்வொருவரும் ஒன்றிணைவோம்.... வணிகத்தில் மேம்படுவோம்.....



**கவிதா வாழைபரமேஸ்வரன்**




அருமையான படைப்பு மறந்து போன நமது முன்னோர்களான மன்னர்களை கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தி உள்ளீர்கள். நமது வேட்டுவர் வணிக இதழ் மேலும் பல தகவல்களை கொண்டு வளர வாழ்த்துகள் கவிதா அக்கா.

--- **தமிழ்செல்வி**

இரண்டாவது இதழ், நம் வேட்டுவ மாமன்னர் வல்வில் ஓரியின் சிறப்பு தாங்கி மிகச் சிறப்பாக அனைத்து தகவல்களையும் போதுமான அளவு தகுந்த ஆதாரங்களுடன் பதிவுட்டமைக்கு பாராட்டுகள். மேலும் நம் மலேசிய உறவு முருகன் அவர்களின் வாழ்க்கை வரலாறு அருமை. வணிகமும் அதன் பயிற்சியின் முக்கியத்துவத்தையும் உணர்த்தியமைக்கு வாழ்த்துகள்.

--- **Dr. SARANVANAN**

Kavitha: Well designed , well prepared, stories well captured, excellent effort. வாழ்த்துகள்.

--- **Mr. VELLINGIRI.P**

Wow great. Excellent information & gallery. Hats off to you Dr & dear Kavi. Proud to be a VGn

--- **Mrs. PARVATHI**

மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இந்த குழுவின் மூலம் ஒன்றினைந்து வளர்ச்சி அடைவதுடன், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து சொல்லும் ஒரு மிகச் சரியான வணிக இதழ்.. நம்மவர்களுக்கான நம்பிக்கையான மாத இதழ்... வளர வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன். முடிந்தால், வாய்ப்பு இருந்தால் இதழில் ஒரு பக்கம் நமது குலம் மற்றும் அதன் குல தெய்வம் என்று மாதா மாதம் 10 அல்லது 15 தெரிவித்தால் பயனாக இருக்கும்.

**--- சசிகவுண்டர்**

இனத்திற்கான தங்களின் அயராத உழைப்பிற்கு சிரம் தாழ்த்தி வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

**---- ராமகிருஷ்ணன். ந**
**(பொய்யாமொழியூர்)**
**சத்தியமங்கலம்**

நமது வேட்டுவ சமுகத்தின் மேம்பாட்டிற்காக பல சிறப்புமிகு அறிய சேவைகளை நல்கி வரும் VG BUSINESS MAGAZINE க்கு எமது வாழ்த்துகளை இங்கே பதிவு செய்கிறேன். VG BUSINESS MAGAZINE அருமையான வண்ண வடிவமைப்புடனும், எளிமையான பைந்தமிழிலும், அனைவரையும் கவர்ந்தது என்றே கூறலாம்! மலேசியாவில் வாழும் எம்மையும் அழைத்து எமது படைப்பையும் இடம் பெறச்செய்த அனைத்து இதயக்கனிகளுக்கும் நன்றிகள் பல. இந்த அரிய முயற்சி மேலும் பெறுக வேண்டும், நமது வேட்டுவ சமுகத்திற்கு உங்களது அறப்பணி சிறந்தோங்க கோட்டமேடு பத்ரகாளியம்மனை வேண்டி பணிகின்றேன்.

**--- முருகன்முத்துச்சாமிகவுண்டர்,**
**மலேசியா**


# தலையூர் அருள்மிகு பெரியநாயகி அம்மன் (காளி தேவி) திருக்கோவில் அமைப்பும் திருத்தல வரலாறும்



“**வெ**ட்ட வெட்ட தழையும் வேட்டுவ தரு” என்று ஆசீர்வதித்து நம் குலம் காக்கும் காளிதேவி (பெரியநாயகி அம்மன்) அருள் பாலித்து வரும் இத்திருக்கோவிலானது தலையூர் காளி மன்னர் கோலோச்சி திருப்பணி செய்து வணங்கிப் பெருமைப்பட்ட திருத்தலமாகும். இத்திருக்கோவில் கரூரில் இருந்து தாராபுரம் செல்லும் வழியில் சின்ன தாராபுரத்திலிருந்து வடமேற்கே 7 கி.மீ தொலைவில் திருப்பூர் மாவட்டம், நஞ்சைத் தலையூரில் அமைந்துள்ளது.

அமராவதி ஆற்றின் தென் கரையில் கம்பீரமாக காட்சி தரும் இத் திருக்கோவில் மிகவும் பழமை வாய்ந்தது. காலத்தை வென்று நிற்கின்றது. நதி தீரத்தில் உள்ள கோவில்களுக்கு எப்பொழுதும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. இயற்கை எழில் சூழ அமைந்துள்ள இத்திருக்கோவில் இன்றும் வலிவும் பொலிவும் கொண்டு சக்தி மிக்கதாக திகழ்கிறது. தலையூர் காளி மன்னர் வாழ்ந்து செழித்த அரண்மனை இருந்த இடம் இன்று வயலாக காட்சியளிக்கிறது. இன்றும் அரண்மனைத் தோட்டம் என்றே அழைக்கப்படுகிறது. வடக்கு நோக்கியுள்ள இத்திருக்கோவில் காளி மன்னர் காலத்துக்குப் பின்னர் அவரது பரம்பரையினரால் புதுப்பிக்கப்பட்டு நாயக்கர் மரபு கட்டட அமைப்பில் சிலைகள் பெரிதாகவும் நாயக்கர் மரபிலும் காட்சியளிக்கின்றன. காவல் தெய்வங்களுக்கும் நாயக்கர் காலத்து மரச்சிற்பங்கள் காணலாம். நெற்றிக்கல்லில் நாயக்கர் மரபு மகாலட்சுமி (கஜலட்சுமி) சின்னம் காட்சி தருகிறது. கொடிமரத்தின் கீழ் வடக்குப் பகுதியில் மீன் சின்னம் உள்ளது. இங்கு கல்வெட்டுகளும் உள்ளன. கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்தால் முக்கியமான விவரங்கள் கிடைக்கும். வடக்கு திசையில் கிழக்கு நோக்கிய கருப்பராயர் சன்னதி உள்ளது. முன்னோர்கள் எனக் கருதப்படுகின்ற சிலை ஒன்றும் உள்ளது. மக்கள் போற்றும் வகையில் மாசித் திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

இங்குள்ள வாய்க்காலின் தெற்கே உள்ள புஞ்சை தலையூரில் கரிய காளியம்மன் (கொங்களம்மன்), கன்னி மாரம்மன் மற்றும் சிவன் கோவில்களும் உள்ளன. இவை அனைத்துமே காளி மன்னரும், அவருக்குப்பின் வந்த பரம்பரையினரும் வணங்கிய திருத்தலங்களாகும். இத்திருக்கோவிலின் தாய் கோயில் இங்கிருந்து நேர் தெற்கே பத்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள அம்மன் கோவில் பாளையம் என்ற சிற்றூரில் அமைந்துள்ளது. அதுவே அங்கு உள்ள பெரியநாயகி அம்மன் கோவிலாகும். மேலும் சின்ன நாயகி அம்மன், மெய்ப்பொருள் நாதசுவாமி ஆலயங்களும் அங்குள்ளன. பெரியநாயகி அம்மன் திருக்கோயிலுக்கு தெற்கு வாயிலில் அமைந்துள்ள பிள்ளையார் கோவில் இக்கோவிலுக்குரியது. பிள்ளையார் சிலை சற்று சாய்வாக முதுகில் பூணூல் போன்ற அமைப்பும் சங்கு போன்ற தோற்றமும் கொண்ட மிக அபூர்வமான அற்புதமான அமைப்பை கொண்டுள்ளது. இப்போதும் பிள்ளையார் கோவிலில் அபிஷேக ஆராதனைகள் செய்த பிறகே அம்மன் கோவிலில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.






நம் சமூகத்தின் அடையாளமாக விளங்கும் இத்திருக்கோவில் ஒரு புனித ஸ்தலமாகும். வரலாறு போற்றும் வீரம் விளைந்த நிலம் இது. இத்திருக்கோவில் வளாகத்தின் உள்ளே சென்றாலே மக்கள் மனதில் அமைதியும் சாந்தமும் தவழும். ஈடுபாட்டுடன் வழிபட்டால் நினைத்தது நிறைவேறும். இது கண்கூடாக கண்ட உண்மை. திருக்கோவில் திருப்பணி செய்யப்பட்டு சீரிய முறையில் வழிபட்டு வந்தால் நம் சமுதாயம் செழித்து இன்றும் என்றும் வளமுடன் நலமுடன் நம் மக்கள் வாழ்வாங்கு வாழ்வர்.


அற்பணிப்பு மனப்பாங்கும், ஆர்வமும் விடாமுயற்சியும் கொண்ட நம் இன இளைஞர்கள் முயன்றால் சென்னை எழும்பூர் ஆவணக்காப்பகம், தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகம் மற்றும் கோயம்புத்தூர் சேலம் மாவட்டங்களின் பழைய ஆவணங்களில் காளி மன்னர் மற்றும் இத்திருக்கோவில் பற்றிய அதிகாரப்பூர்வ முக்கிய விபரங்கள் மற்றும் வரலாறு தெரிந்து கொள்ள ஏதுவாகும்.

**கட்டுரையாளர்**



**க. ஆண்டமுத்து வள்ளல்**
தலையூர் காளி கோவில்
பரம்பரை பட்டக்காரர்
புகழூர்

# சுதந்திர போராட்டத்தில் நேதாஜியுடன் கரைய குல வேட்டுவக்கவுண்டர்கள்



## தெய்வத்திரு. செ. இராமசாமி கவுண்டர்

இன்று நாம் மகிழ்ச்சியாக சுதந்திர காற்றை சுவாசித்து கொண்டிருக்கின்றோம் என்றால் அதற்கு எண்ணற்ற பல சுதந்திர போராட்ட தியாகிகளின் தியாகத்தாலேயே நமக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. நமது வேட்டுவக்கவுண்டர் சமுதாய முன்னோர்களில் பலரும் சுதந்திரப் போராட்டங்களில் மிகப் பெரிய பங்கு வகித்துள்ளனர். கரைய வேட்டுவர் குலத்தை சேர்ந்த சகோதரர்கள் மூவர், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தோற்றுவித்த இந்திய தேசிய இராணுவ படையில் இணைந்து வெள்ளையர்களை எதிர்த்து படைகளை வழிநடத்திச் சென்று வீரப்போர் புரிந்துள்ளனர். அத்தகைய சிறப்புமிக்க சுதந்திர போராட்ட தியாகிகளைப் பற்றி தான் இங்கு காணப்போகிறோம்.



ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி அஞ்சல், தம்பிரான் வலசை சேர்ந்த திரு. செங்கோட கவுண்டர், திருமதி. உருமாயி தம்பதிகளுக்கு ஐந்து மகன்கள். அவர்களுள் மூவர் சுதந்திர போராட்ட தியாகிகள். திரு.இராமசாமி கவுண்டர், திரு.குழந்தைசாமி கவுண்டர், மற்றும் திரு. முத்துசாமி கவுண்டர். சகோதரர்கள் மூவரும் சிறு வயதிலிருந்தே தாய் நாட்டின் மீது கொண்ட பற்றின் காரணமாக 1943 ல் சுபாஷ் சந்திர போஸ் தலைமையிலான இந்திய தேசிய இராணுவப் படையில் இணைந்து நாட்டின் விடுதலைக்காக போராடினர்.

## இந்திய தேசிய இராணுவம்

(Indian National Army – INA) என்பது இரண்டாம் உலகப்போரின் போது பிரிட்டிஸ் அரசினை எதிர்த்துப் போரிட நேதாஜி சுபாஷ் சந்திர போஸால் தெ ன் கி ழ க் கா சி யா வி ல்

உருவாக்கப்பட்ட ஒரு படை. இது ஜப்பானியப் பேரரசின் உதவியுடன் இந்தியாவின் காலனிய அரசை எதிர்த்துப் போரிட்டது. மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற இடங்களில் வாழும் புலம்பெயர் இந்தியர்களும், இந்தியாவிலிருந்து சென்ற தன்னார்வலப் படை வீரர்களும் இதில் இடம் பெற்றனர். 1943 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற இந்திய தேசிய படையின் வீரர்களுக்கான தேர்வில் திரு.இராமசாமி கவுண்டர், திரு. குழந்தைசாமி கவுண்டர், மற்றும் திரு. முத்துசாமி கவுண்டரும் தேர்வு செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் சிங்கப்பூர் அழைத்து செல்லப்பட்டு சிங்கப்பூர் சிலோத்தார் முகாமிலும், பினாங்கு முகாமிலும் இராணுவப்பயிற்சி பெற்றனர்.

## சுதந்திர போர்

1944 ல் சுபாஷ் சந்திர போஸ் தனது படைத்தளபதிகள் மற்றும் சில ஜப்பானிய தளபதிகளுடன் பிரிட்டிஸ்கார் மீது போர் தொடங்க ஆலோசனை நடத்தினார். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் நாடு விடுதலை பெற வேண்டுமாயின் பிரிட்டிஸ் அரசை எதிர்த்து இந்தியாவில் போர் நடத்துவதே சரியான செயல் என்று முடிவெடுத்தனர். INA இந்தியாவின் எல்லை பகுதிகளான பர்மாவின் அரகான் காடுகள் மற்றும் சிட்டஹாங்ல் பிப்ரவரி 4, 1944 அன்று தனது முதல் தாக்குதலை தொடங்கியது.




இராமசாமிகவுண்டர் INA வின் 6 வது கொரில்லா படையின் 5-வது பிரிவை தலைமை தாங்கி நடத்தி சென்றார். இவரது தம்பி குழந்தைசாமி கவுண்டர் INA வின் 9 வது கொரில்லா படையில் சிறப்பாக பணியாற்றினார். இவரது மற்றொரு தம்பியான திரு. முத்துசாமிகவுண்டர் அவர்கள் போர்க்களத்திலேயே வீரமரணம் அடைந்தார்.




Monument of INA Martyrs at Kolkata

இந்திய தேசிய இராணுவப் படையின் (INA) தாக்குதலை சமாளிக்க முடியாமல் பிரிட்டிஷ் படை பின்வாங்கியது. INA படை மணிப்பூர் பகுதியை கைப்பற்றியது. முதல்வெற்றி மாபெரும் வெற்றி. INA ஜப்பானியர்களின் 15 வது இராணுவத்துடன் இணைந்து இம்பால் மற்றும் கோஹிமாவை முற்றுகையிட்டது. மேலும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ஜப்பானியர்களால் கைப்பற்றப்பட்டு இந்திய தேசிய இராணுவத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டது; போஸ் அவற்றிற்கு ஷாகித் (தியாகம்) என்றும் சுவராஜ் (சுதந்திரம்) என்றும் பெயரிட்டார். INA வின் அடுத்த குறி இம்பால். எனவே இம்பால் அருகிலிருந்த விஷ்ணுபூர் என்னும் நகரை நோக்கி நகர்ந்தது. விஷ்ணுபூரையும் கைப்பற்றி அங்கிருந்து

வங்காள மாநிலத்தின் வழியாக நகர்ந்து டெல்லியை கைப்பற்றுவதே INA வின் நோக்கமாக இருந்தது. ஏப்ரல் 22, 1944 ல் தொடங்கிய தாக்குதல் மே 20 வரை நீடித்தது. இப்போரில் INA மிக கடுமையாக போராட வேண்டியிருந்தது. இந்த முறை பிரிட்டன் தனது போர் முறையை மாற்றி INA வை தோல்வியடையச் செய்தது. 1945 ஆகஸ்ட்டில் INA-வின் 6வது கொரில்லா படையில் 5-வது பிரிவில் இம்பால் போர்முனையின் யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராமசாமிகவுண்டர் போப் மலையருகில் பிரிட்டிஷ் இராணுவத்தாரால் கைது செய்யப்பட்டு பிடாதாரி முகாம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டார். இருட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு தினமும் 16 மணி நேரம் கடுமையாக வேலை வாங்கிக் கொடுமைப் படுத்தப்பட்டார். சரியான உணவும் நீரும் தரப்படவில்லை. பின்னர் 1946 ம் வருடம் பிப்ரவரி மாதம் திரு. இராமசாமிக்கவுண்டர் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டார். விடுதலையான பிறகு சில மாதங்கள் சிங்கப்பூர் கப்பல் துறைமுகத்தில் பணிபுரிந்த பின்னர் இந்தியா திரும்பினார்.



மதிப்பிற்குரிய திரு/திருமதி எஸ். ராமசாமி,
த/பெ. செங்கோடன்,
விலாசம் தம்புரான் வலசு,
ஊத்துக்குளி அஞ்சல், ஈரோடு.

பாரத நாட்டின் சுதந்திரத்திற்காக நீங்கள் செய்த தியாகச் செயல்களை நம் நாடும் மக்களும் மறக்கவில்லை.
சுதந்திர இந்தியாவின் சரித்திரத்தில் நீங்கள் என்றென்றும் இடம் பெற்றிருப்பீர்கள்..

# குடும்பம்

திரு. இராமசாமி கவுண்டர் 1957ஆம் ஆண்டு ஜூன் 6-ம் தேதி வடக்கு பொன்னம் பாளையம், பொன்ன வேட்டுவக்கவுண்டர் குலத்தை சேர்ந்த கருப்பண்ண கவுண்டர், சீரங்காயம்மாள் தம்பதிகளின் மகளான அருக்காணியம்மாளை திருமணம் செய்துகொண்டார். சீரோடும் சிறப்போடும் வாழந்த திரு. இராமசாமி கவுண்டர் திருமதி. அருக்காணியம்மாள் தம்பதியினருக்கு ஒரே ஒரு மகள் திருமதி. கனகாம்பாள். இவரது கணவர் முத்துக்கவுண்டன்பாளயத்தை சேர்ந்த திரு.பத்மநாபன் ஆவார். இராமசாமி கவுண்டருக்கு இரு பேத்திகள். சுதா வினோத்குமார் மற்றும் மைதிலி சரவணன் ஆகிய இருவரும் **VG BUSINESS TYCOONS** மற்றும் **VG WOMEN TYCOONS** உறுப்பினர்கள் என்பதில் **VG BUSINESS MAGAZINE** பெருமை கொள்கிறது. திருமதி.சுதாவின் கணவர் திரு. வினோத்குமார் அவர்கள் **GALAXY MOULD TEXTURES** மற்றும் **VWIN TEXTURES** என்னும் கம்பனிகளை திறம்பட நடத்தி வருகிறார். திருமதி. மைதிலி சரவணன் தனது கணவருடன் இணைந்து சாரல் மோட்டார்ஸ் என்னும் நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.









## தாமிரப்பட்டயம்

1989ஆம் ஆண்டு முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதியிடம் இருந்து சுதந்திர போராட்ட தியாகிகளுக்கான தாமிரப் பட்டயம் வழங்கப்பட்டு இராமசாமி கவுண்டர் மற்றும் குழந்தைசாமி கவுண்டர் கௌரவிக்கப்பட்டார்கள். 1991 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு பொன்விழா ஆண்டு கொண்டாட்டத்தில் சுதந்திர போராட்ட தியாகிகளுக்கான கேடயம் இராமசாமி கவுண்டருக்கும் குழந்தைசாமிகவுண்டருக்கும் வழங்கப்பட்டு இருவரும் கௌரவிக்கப்பட்டனர்.

## மறைவு

1996- ம் ஆண்டு ஜனவரி, 31 ம் தேதி பகல் 1.30 மணியளவில் திரு. இராமசாமிகவுண்டர் இயற்கை எய்தினார். மரணம் தழுவும் முன் அவர் உச்சரித்த கடைசி வார்த்தை **"ஜெய்ஹிந்த்"**.

இத்தகைய சிறப்பு மிக்க நமது வேட்டுவக்கவுண்டர் சமுதாய சுதந்திர போராட்ட தியாகிகளை போற்றுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.



> நேதாஜியே தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்.
>
> – பசும்பொன் முத்துராமலிங்கனார்

# 75 வயது இளைஞரின் சாதனை

**வி**டா முயற்சியும் வீறு கொண்ட எழுச்சியும் வேட்டுவர்களுக்கே உரித்தான குணங்கள். சிலரது பெயரை சொல்லும் போதே அவர்கள் கடந்து வந்த பாதையும் சாதனைகளும் தெளிவாக தெரியவரும். அதுபோல புல்லட் கோபால் என்னும் பெயரை கேட்கும் போதே புல்லட்டின் வேகத்தை போன்ற அவரது உற்சாகமும் உழைப்பும் நம் கண்முன் வந்து நிற்கிறது. 75 வயதை கடந்த பின்பும் உற்சாகத்தோடும் இளைஞர்களுக்கே சவால்



விடும் உத்வேகத்தோடும் நம்மோடு உரையாடுகிறார்.

## பூர்வீகம்....

மோக்காளி வேட்டுவகவுண்டர் குலத்தைச் சேர்ந்த நான் கரூரில் 5.11.1945 இல் பிறந்தேன். என் தகப்பனார் பெயர் திரு. சாமியப்ப கவுண்டர். தாயார் பெயர் திருமதி. பாப்பாயி அம்மாள். என்னுடைய அப்பா ஒரு அரிசி ஆலையில் சாதாரண டிரைவராக பணியில் இருந்தவர். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்கள். நான் கரூரில் பிறந்து வளர்ந்து இருந்தாலும் எனது முன்னோர்களின் பூர்வீகம் தென்னிலை பெரிய வாங்கலாம்பாளையம். எனது குல தெய்வம் மோகனூர் நாவலடியான் கோவில்.

## படிப்பு....

SSLC வரை படித்துள்ளேன். ஆங்கில நாவல்களை விரும்பிப் படிக்கும் பழக்கமுள்ள எனக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்பே அதாவது என்னுடைய 25வது வயதில் final diagnosis என்னும் புகழ்பெற்ற மருத்துவ நாவலை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த நாவலை படிப்பதற்காகவே மெடிகல் டிக்ஷனரி வாங்கிப் பயன்படுத்தினேன். எண்ணற்ற ஆங்கில நாவல்களை வாசித்து எனது ஆங்கில அறிவை வளர்த்துக் கொண்டதால் இன்று எளிதாக வெளிநாட்டினருடன் வணிகத் தொடர்பை ஏற்படுத்தி கொள்ள முடிகிறது. புத்தகம் வாசிக்கும் பழக்கம் எனது வணிகத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## வேலை....

1963 இல் தஞ்சாவூர் சாமியப்பா கூட்டுறவு கல்வி நிறுவனத்தில் கூட்டுறவு மேற்பார்வையாளர் பயிற்சியில் தேர்வு பெற்று, கரூர் அருகிலுள்ள மலை கோவில் என்னும் ஊரிலிருந்த திருச்சிராப்பள்ளி கூட்டுறவு நூற்பு ஆலையில் கணக்கு பிரிவில் மூத்த கணக்காளராக பணியில் அமர்ந்து பின்னர் ஆலய நிர்வாகப் பிரிவு மேலாளராக பணிபுரிந்தேன். சுமார் பதினைந்து வருடங்கள் பணிபுரிந்த பின்னர் தொழில் செய்யும் பொருட்டு வேலையை ராஜினாமா செய்துவிட்டேன்.

## தொழில்....

கரூரில் ராயல் என்ஃபீல்டு மோட்டார் சைக்கிள் டீலராக தொழிலை தொடங்கினேன்.

நான் தான் கரூரில் முதல் டீலர். அதனாலேயே நான் புல்லட் கோபால் என்கிற அடைமொழியுடன் அழைக்கப் படுகிறேன். 1976 ல் இருந்து 2001 வரை 25 வருட காலம் ஸ்ரீ விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ் என்னும் பெயரில் தொடர்ந்து நடத்தி வந்தேன். நான் டீலர்ஷிப் தொடங்கிய காலகட்டத்தில் ஒரு புல்லட்டின் விலை 7500 ரூபாய். தற்சமயம் ஒரு புல்லட் ஒன்றின் மதிப்பு ஒன்றரை லட்சம் ரூபாய்க்கும் மேல் விற்கப்படுகிறது.




## டெக்ஸ்டைல் ஏற்றுமதி....

2001 ஆம் ஆண்டிற்குப் பிறகு ராயல் என்ஃபீல்டு மோட்டார் சைக்கிள் டீலர் தொழிலை விட்டுவிட்டு டெக்ஸ்டைல் தொழில் ஆரம்பித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறேன். ஆரம்பத்தில் சிறிய அளவில் பெட்சீட் மற்றும் துண்டுகளை உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கி ஈரோடு மார்க்கெட்டில் விற்று வந்தேன். பிறகு தொழிலில் படிப்படியாக முன்னேறி ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்து வந்தேன். பின்னர் 2010 இல் இருந்து இன்று வரை ரமா டிரேடர்ஸ் என்னும் பெயரில் அமெரிக்காவிற்கு ஹோம் டெக்ஸ்டைல் ப்ராடக்ட்ஸ் ஏற்றுமதி செய்து வருகிறேன். வருடத்திற்கு 15 கோடிக்கு மேல் வர்தகம் நடைபெற்று வருகிறது. மேலும் 75 க்கும்

மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பை அளித்து வருகிறேன். 2018 ஆம் ஆண்டு மாண்புமிகு மத்திய தொழில்துறை (டெக்ஸ்டைல்) அமைச்சர் ஸ்மிரிதி இராணி அவர்களிடமிருந்து எக்ஸ்போர்ட் பர்ஃபாமென்ஸ் அவார்ட் எனக்கு கிடத்தது. கரூரில் 300க்கும் மேற்பட்டோர் ஜவுளி ஏற்றுமதி தொழிலில் உள்ளனர். இருந்த போதிலும் என்னுடைய நேர்மை மற்றும் பொருளின் தரத்தினால் எனது வணிகத்தை வெற்றிகரமாக தொடர்ந்து நடத்தி வர முடிகிறது.





## வணிக செயல்பாடுகள்....

தரத்தை உறுதி செய்வதற்கு பல கட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மேலும் எங்களிடம் மொத்தமாக கொள்முதல் செய்யும் அமெரிக்க வாடிக்கையாளர் அவருடைய தனிப்பட்ட தரக் கட்டுப்பாட்டாளரை இங்கு நியமித்துள்ளார். அந்த தரக் கட்டுப்பாட்டாளர் சான்றளித்த பொருட்களை மட்டுமே நாங்கள் ஏற்றுமதி செய்து வருகிறோம். தரமான பொருட்கள் கப்பலின் மூலம் அமெரிக்க சென்றடைகிறது. இங்கிருந்து கடல் வழியாக அமெரிக்கா செல்வதற்கு 40 நாட்கள் ஆகின்றன. அவசரத் தேவைக்கு விமானத்திலும் அனுப்பி வைக்கிறோம்.

## குடும்பம்



எனது மனைவியின் பெயர் திருமதி. அன்னபூரணி. எங்களுக்கு இரு மகள்கள் உள்ளனர். மூத்த மகளின் பெயர் ரமாபிரபா; பிஎஸ்சி மைக்ரோ பயாலஜி மற்றும் எம்எஸ்சி பொலிட்டிகல் சயின்ஸ் பட்டம் பெற்று ஈரோடு பாரதிய வித்யா பவன் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். அவரது கணவர் K.R.அசோக் பிடெக் கெமிக்கல் இன்ஜினியரிங் படித்தவர். சொந்தமாக கெமிக்கல்ஸ் நிறுவனத்தை கோவில் பாளையத்திற்கு அருகிலுள்ள பழமங்கலத்தில் நடத்தி வருகிறார். அவர்களுக்கு ஒரு மகள் உள்ளார். எனது இளைய மகளின் பெயர் ராமலட்சுமி. இங்கு BABL படித்த பின்னர் லண்டன் சென்று எம்பிஏ படித்தார். அவரது கணவர் P. ஜோதிராஜ் அவர்கள் பிசியோதெரபி படித்துள்ளார். அவரும் லண்டனில் NHSA ல் பணிபுரிந்து வருகிறார். அவர்களுக்கு ஒரு மகன் உள்ளார்.

## வெற்றியின் ரகசியம்....

ஒருவர் ஏற்றுமதி தொழிலில் முன்னேற வேண்டுமென்றால் சுய ஒழுக்கம், சரியான இறக்குமதியாளர்களை தேர்ந்தெடுத்தல், தரமான பொருட்களை சரியான நேரத்தில், சரியான விலையில் ஏற்றுமதி செய்தல், மேலும்

பணம் மேலாண்மை, மற்றும் பல மொழி புலமை போன்றவையே வெற்றிக்கு மூலதனம்.

## ஆரோக்கியத்தின் ரகசியம்....

நான் இந்த வயதிலும் ஆரோக்கியமாக இருப்பதற்கு காரணம் கடுமையான உழைப்பும் மகிழ்ச்சியான வாழ்க்கையும் ஆரோக்கியமான சைவ உணவுப் பழக்கம் மற்றும் ரெகுலரான நடைப்பயிற்சியே காரணம். பழங்களையும் காய்கறிகளையும் அதிக அளவில் எடுத்துக் கொள்கிறேன். பாலிஸ் செய்யப்பட்ட அரிசி வகைகளை தவிர்த்து விட்டு சிறுதானியங்களையே தொடர்ந்து எடுத்து வருகிறேன். சாமை தினை, குதிரைவாலி, கம்பு, கேழ்வரகு போன்றவையே எனது பிரதான உணவு.

## இளைஞர்களுக்கான அறிவுரை....

நம்முடைய சமுதாய இளைஞர்கள் வேலைவாய்ப்பு மற்றும் விவசாயத்தை மட்டுமே நம்பியிராமல் தைரியத்தோடு வணிகத்தில் ஈடுபடவேண்டும். நேர்மறை சிந்தனைகளோடு புதிய முயற்சிகளை செய்ய வேண்டும். நான் வேலையை மட்டுமே நம்பியிராமல் தைரியமாக வேலையை ராஜினாமா செய்துவிட்டு வணிகத்தில் இறங்கியதால் தான் இன்று இந்த உயர்ந்த நிலையை எட்டி உள்ளேன். ஒவ்வொரு இளைஞர்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற துடிப்புடன் இருக்க வேண்டும். ஆர்வமும் விடாமுயற்சியும் இருந்தால் முன்னேற்றத்திற்கு வயது ஒரு தடையல்ல......

# பொருளாதார சுதந்திரம்



**நா**ம் எவ்வளவு கஷ்டப்பட்டு நேர்மையாக உழைக்கின்றோம்; இருந்தும் நம்மால் சம்பாதிக்க முடியவில்லை. நமக்கு முன்னர் இருந்த தலைமுறையும் பொருளாதார வளர்ச்சி அடைய முடியவில்லை. நம்முடைய அப்பா, தாத்தா மற்றும் நம்மளுடைய வாரிசுகளும் பொருளாதார சிக்கல்களை பெரிதும் சந்திக்க நேரிடுகிறது. ஒரு சிலர் எப்போதும் கடனில் இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? சிலருக்கு வெற்றி என்பது வெறும் கனவாகவே உள்ளது. நாம் இந்த கனவை எப்படி நனவாக மாற்றுவது. எல்லோருக்கும் இது ஒரு புதிராகவே இருக்கிறது.

இந்த புதிருக்கு என்ன விடை?




இது சாதாரண விஷயம் தான்; ஆம் பொருளாதார அறிவு இருந்தால் எல்லாவற்றையும் எளிதாக ஜெயிக்க முடியும்; பல மடங்கு வெற்றி அடைய முடியும்; நிறைய சம்பாதிக்க முடியும்; வாழ்க்கையில் நிம்மதியாக இருக்க முடியும். இந்திய மக்களில் 75% பேர் கல்வியறிவு பெற்று இருந்தாலும் 24% தான் பொருளாதார அறிவு பெற்று இருக்கிறார்கள். இதனால் தான் இந்தியாவில் 18 ஆயிரம் கோடி ரூபாய் வங்கியில் சேமித்து அதை பயன்படுத்தாமல் கடந்த 10 ஆண்டுகளாக அப்படியே வைத்திருக்கிறார்கள். மற்றும் இந்திய இளைஞர்கள் 50% பேர் ஒரு பைசா கூட சேமிக்காமல் இருக்கிறார்கள். இந்த முரண்பாட்டிற்க்கு பொருளாதார கல்வி அறிவின்மையே காரணம்.

சில சமயங்களில் பணக்கஷ்டத்தில் சிரமப்பட முக்கிய காரணம் பொருளாதாரத்தில் குறைவான அறிவு பெற்று இருப்பதேயாகும். நாம் சம்பாதிக்கும் பணத்தை எவ்வாறு சேமிக்க வேண்டும், எதில் சேமிக்க வேண்டும், நமது பட்ஜெட் என்ன, அதற்கேர்ப்ப நாம் எவ்வாறு திட்டமிட வேண்டும், எதிர்காலத் தேவைகள் என்ன என்பது போன்றவற்றை தெளிவாக தெரிந்து கொள்ளமல் இருப்பது பொருளாதார நெருக்கடி உருவாக முக்கிய காரணங்கள் ஆகும். செலவு செய்யாமல் சேமிப்பது அல்லது சேமிக்கமல் செலவு செய்வது என்பது சரியான பொருளாதார அறிவாகாது. இதற்கு நாம் நமது குழந்தைகளுக்கு சிறுவயது முதலே சரியான முறையில் பொருளாதாரத்தை மேம்படுத்த எவ்வாறு திட்டமிட்டு பட்ஜெட் போடுவது, சேமிப்பது, முதலீடு செய்வது போன்றவற்றை தெளிவாக கற்றுக் கொடுக்க வேண்டும். நாம் நம் குழந்தைகளுக்கு முறையாக பொருளாதாரத்தை கையாள்வதை கற்றுக் கொடுத்தால் வரும் காலங்களில் நமது வேட்டுவக்கவுண்டர் சமுதாயம் பொருளாதாரத்தில் மிகப்பெரிய வெற்றியை காணமுடியும்.






அடுத்ததாக பொருளாதார சுதந்திரத்தைப் பற்றி எத்தனை பேர் சிந்தித்திருக்கிறோம். அதில் எவ்வளவு பேர் பொருளாதார சுதந்திரத்தை அடைந்திருக்கிறோம் என்றால் அது மிகக் குறைவே. அது என்ன பொருளாதார சுதந்திரம், இதுவரை கேள்விப்பட்டதே இல்லையே என்று சொல்பவர்களே மிக அதிகம். பொருளாதார சுதந்திரம் என்பது நாம் விரும்பிய வண்ணம் நமது வாழ்க்கைக்கு தேவையான செலவுகளை எளிதாக எதிர் கொள்வது ஆகும். நம்முடைய குழந்தைகளை படிக்க வைப்பதற்குப் பணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது. அதே மாதிரி விமரிசையாக குழந்தைகளின் திருமணம், நம்முடைய ஓய்வு காலத்திற்குத் தேவையான பணம் மற்றும் விரும்பிய வெளி நாடுகளுக்கு சுற்றுலா பயணம் செய்வது முதலியவை பொருளாதார சுதந்திரத்தின் வெளிப்பாடுகள். பலர் பொருளாதார சுதந்திரம் என்பது ஆடம்பரமாக செலவு செய்வது என்று தவறாக நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாம் வளர்ந்த முறை பொருளாதார சுதந்திரம் பற்றி என்றுமே சொல்லித் தந்ததில்லை. இன்று பலருக்கு கோடீஸ்வரர் ஆக வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் அதற்கான முயற்சிகள் இல்லை. வெறும் எண்ணம் மட்டும் இருந்தால் போதாது. நம்முடைய எண்ணம் தீவிரமாக இருக்கும்போது தான் அதை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம், அதுதான் வெற்றிக்கான முதல்படி. இதை அடைவது சுலபம்.

நாம் 40 வயதில் அதிகம் முதலீடு செய்ய வேண்டும். அதுவே 22 வயது இளைஞர்களுக்கு குறைந்த முதலீடு போதுமானது. பணம் என்பது நமக்கு நம்பிக்கை தரக்கூடியது. நம்பிக்கை இழந்து விட்டால் நம்மால் எதிலும் வெற்றி கொள்ள முடியாது. நாம் படித்த படிப்பு நமக்கு ஒரு நல்ல வேலை வாய்ப்பைத் தரும். ஆனால் பொருளாதார அறிவு பெற்றவர்களே வெற்றி கொள்கிறார்கள். இந்த சம்பளத்தில் என்னால் எந்த முதலீடும் செய்ய முடியாது என்ற வாக்கியத்தை, முதலீடு செய்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று மாற்றிக் கேட்டுப்பாருங்கள். உங்களுடைய வாக்கியம் மாறுபடும்போது உங்களுடைய வாழ்க்கையும் மேம்படும். வெற்றி பெற வேண்டும் என்ற தாகம் இருக்கவேண்டும். நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் என்பதை விட அதில் எவ்வளவு நீங்கள் சேமித்து அதை முதலீடு செய்கிறீர்கள் என்பது முக்கியம். முறையாக முதலீடு செய்யாத எதுவும் ஓட்டை வாளியில் நீர் இறைப்பதற்குச் சமம். பொருளாதார சுதந்திரத்தை பற்றித் தெரியாததாலும், அதை அடைவதற்கு சில விஷயங்கள் கடை பிடிக்க வேண்டும் என்பதாலும் இதை அடைந்தவர்கள் மிகக்குறைவு.



நம்முடைய தேவைகள் அதிகரித்துக் கொண்டுவரும் இன்றைய சூழலில் பொருளாதார சுதந்திரம் மிகவும் அவசியமாகிறது. சுதந்திரம் என்பது அவ்வளவு எளிதான விஷயம் இல்லை. எவ்வளோவோ பேர் செய்த தியாகங்கள், முயற்சிகள் ஆகியவற்றால் தான் இன்று நாம் சுதந்திரக் காற்றினை சுவாசித்துக் கொண்டிருக்கிறோம்.

அதுபோல பொருளாதார சுதந்திரம் கிடைப்பதற்க்கு நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இங்கு அர்ப்பணிப்பு என்பது எல்லாவிதமான முதலீட்டைப் பற்றியும் உள்ள அடிப்படை அறிவை தெரிந்து கொள்வது. அந்த அறிவு நம்மைத் தேவையற்ற முதலீட்டில் இருந்து காப்பாற்றுவதோடு சிறந்த முதலீட்டில் முதலீடு செய்யத் தூண்டும்.

ஒவ்வொருவரும் கூடிய விரைவில் நான் பொருளாதார சுதந்திரம் அடைவேன் என்று உறுதி மொழி எடுத்துக் கொண்டு செயல்பட்டோமேயானால் இன்னும் சில வருடங்களில் பொருளாதார சுதந்திரத்தை அடையலாம். அனைவரும் பொருளாதார சுதந்திரத்திற்காக பாடுபடுவோம்; பொருளாதார நெருக்கடி இல்லாத வேட்டுவ கவுண்டர் சமுதாயத்தை உருவாக்குவோம் என்று உறுதிகொள்வோம்.... வெற்றி பெறுவோம்....



**Dr. D. Valai Parameswaran, MD,**
PGCIH,FICM,PGDEM,DFID,PGDIP.Endo(UK)
Six Sigma & Green Belt Certificate Holder



## அடுத்த இதழில்....

கல்வி தந்தை
கே.வி.காளியப்பகவுண்டர்
வாழ்க்கை வரலாறு

VettuvarTV
VettuvarTV
https://youtube.com/c/VettuvarTV

VG
BUSINESS
Tycoons
9003795243
VG HELP LINE


VettuvarTV
வேட்டுவர் வணிக மாத இதழ்
ஒவ்வொரு மாதமும் உங்களுடைய
செல்போனுக்கு /இமெயிலில்
தவறாமல் கிடைக்க உடனே
கீழ்க்கண்ட எண்ணிற்கு உங்கள்
இமெயில் ஐடி / செல் நம்பர் யை
வாட்ஸ்அப் பண்ணவும்.
+91 90037 95243
VETTUVARTV


E-BOOK
VettuvarTV
SAVE GREEN
வேட்டுவர்
வணிக
மாத இதழ்